மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இல்லாத விவரங்களைத் தந்துகொண்டிருக்கிறார். 25 இலட்சம் ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டதென்று சொல்கிறார். ஆனால், அந்தத் திருக்கோயிலுடைய பரம்பரை அறங்காவலர் திரு. ரோஸ்பிள்ளை அவர்கள் மூலமாக 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 11 இலட்சம் ரூபாய் வரையிலே தற்பொழுது பணிகள் முடிந்திருக்கின்றன. ஆகவே, துறையின் சார்பிலே நிதி ஒதுக்குவதாக எந்த உறுதிமொழியும் தரப்படவில்லை. அந்தத் திருப்பணிக்கான நிதியை. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். ரவிச்சந்திரன். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். திரு. எல். ரவிச்சந்திரன், பேசுங்கள். (குறுக்கீடு)

திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகர் மையப் பகுதியில் அமைந்திருக்கின்ற அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய காலியிடத்தில் இன்றையதினம் ரூபாய் ஒரு கோடி செலவிலே ஒரு வணிக வளாகம் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டு, இப்போது அந்தப் பணி முடக்கி வைக்கப்பட்டுள்ளது. அந்தப் பணியை வெகு விரைவில் நடத்தி முடிக்க இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனி வினா எழுப்பவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு.ப. டில்லி பாபு, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

7—

தரம் உயர்த்துதல்

***92113—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்

2010 ஏப்ரல் 5]

கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், எட்டிப்பட்டி ஊராட்சி, அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 2009-2010 ஆம் கல்வி ஆண்டில், அரசாணை (நிலை) எண் 129, பள்ளிக் கல்வித் (இ1) துறை, நாள்: 15-6-2009-ன்படி கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், எட்டிப்பட்டி ஊராட்சி, அரசு நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டுவிட்டது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.எஸ். விஜயகுமார், நான் உங்கள் பெயரை அழைக்காமல் நீங்கள் எழுந்து நிற்பது முறையல்ல. உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) கிருஷ்ணகிரி மாவட்டம், எட்டிப்பட்டி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக அறிவித்தமைக்கு. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்திலே இந்த மாதிரி இடையூறு பண்ணாதீர்கள், உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு. (குறுக்கீடு)

முற்பகல் 10-25

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எட்டிப்பட்டி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி அறிவித்தமைக்கு மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்திலே, . . .

[2010 ஏப்ரல் 5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகுமார் அவர்கள் கேட்ட ஒரு கேள்வியை ஒட்டி, சில நிகழ்வுகள் இங்கு நடந்து கொண்டிருக்கின்றன. 75 சதவிகிதப் பணிகள் முடிவடைந்திருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் தரப்பிலே பதில் தரப்பட்டிருக்கிறது. எதுவும் நடைபெறவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகுமார் அவர்கள் தன்னுடைய வாதத்தை எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, நம்முடைய மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், நானே உறுப்பினர் அவர்களை நேரடியாக அழைத்துச் செல்கிறேன் என்று தன்னுடைய பதிலுரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. பதிலுரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். வேண்டுமானால், அவைக் குறிப்பிலே நீங்கள் பார்த்துக்கொள்ளலாம். எனவே, இதனைப் பெரிய பிரச்சினையாக்கிட அவசியமில்லை. எனவே, உறுப்பினர் விரும்பினால், அமைச்சர் அழைத்துச் செல்வதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு. (குறுக்கீடு) இதில் என்ன இருக்கிறது? (குறுக்கீடு) தேவைப்பட்டால் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அமைச்சருடன் சென்று பார்த்துவிட்டுச் சொல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. ப. டில்லி பாபு, பேசுங்கள்.

திரு. ப. டில்லி பாபு: கிருஷ்ணகிரி மாவட்டம், எட்டிப்பட்டி ஊராட்சி அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தியதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேநேரத்தில், தமிழகத்தில் மிகவும் பின்தங்கிய கல்வி மாவட்டமாக இருப்பது தருமபுரி மாவட்டம். சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய அரசினுடைய அறிவிப்பிலே 50 சதவிகிதம் பேர் கல்வி பெற்றவர்கள் தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். 54 சதவிகிதத்தினர், அதாவது 30-வது இடத்தில் இருப்பவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். பத்திரிகைகளில் நேற்றையதினம்கூட செய்தி வந்திருக்கிறது. ஓராசிரியர் பள்ளிகளாக 18 நடுநிலைப் பள்ளிகள்

2010 ஏப்ரல் 5]

இன்றைக்கும், குறிப்பாக ஒசூர் வட்டாரத்திலே பாலதொட்டனப் பள்ளி, அந்தேவனப் பள்ளி, பெண்ணாங்கூர் பள்ளிகளிலே 100 முதல் 160 மாணவர்கள் வரை இருக்கக்கூடிய பள்ளிகள் ஓராசிரியர் பள்ளிகளாக இன்றைக்கும் தொடர்ந்துகொண்டிருக்கும் அவலநிலை இருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள்மூலமாக தமிழக அரசின் கவனத்தை ஈர்க்க விரும்புவது என்னவென்றால், மத்திய அரசு இலவசக் கட்டாயக் கல்வித் திட்டத்தை அமலாக்க வேண்டுமென்று பல அரசாணைகளை வெளியிட்டிருக்கக்கூடிய நிலையில், இன்றைக்கும் பல கிராமங்களிலே பள்ளிக்கூடங்கள் இல்லாத நிலையில், சென்ற ஆண்டில் ஓர் ஆரம்பப் பள்ளிகூட தொடங்கப்படாத நிலையில், இந்த ஆண்டு தொடங்கப்பட்டிருக்கிற பள்ளிகள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டில்லி பாபு, கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. ப. டில்லி பாபு: கேள்வியைக் கேட்டு முடித்துவிடுகிறேன். ஏறக்குறைய ஒரு இலட்சம் ரூபாய் பணம் செலுத்தி, 5 ஆண்டு காலம் காத்திருந்து, கெளாப்பாறை, செல்லம்பட்டி இந்தப் பஞ்சாயத்துக்களினுடைய நடுநிலைப் பள்ளிகள் தரம் உயர்த்தப்படாமல் 300, 400 மாணவர்கள் இருக்கின்ற நிலைமை நீடித்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், அடுக்குகின்ற மூட்டைகளில் அடிமூட்டையாக இருப்பதும், ஒருவேளை உணவிற்கும் கஷ்டப்பட்டுகொண்டிருக்கும் நிலையில் தருமபுரி மாவட்டத்தில் இன்னும் தரம் உயர்த்தப்பட வேண்டிய பள்ளிகளைக் கூடுதலாகத் தருவதற்கும், கெளாப்பாறை நடுநிலைப் பள்ளியையும், செல்லம்பட்டி நடுநிலைப் பள்ளியையும் இந்த ஆண்டு தரம் உயர்த்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு தரம் உயர்த்தப்பட்டிருக்கக்கூடிய

பள்ளிகளின் பட்டியலை நீங்கள் பார்ப்பீர்கள் என்றால், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்குக் கூடுதல் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறோம். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஏறத்தாழ 13 பள்ளிகளையும், தருமபுரி மாவட்டத்தில் ஏறத்தாழ அதே எண்ணிக்கையில் இருக்கக்கூடிய பள்ளிகளையும் இன்றைக்கு உயர்நிலைப் பள்ளிகளாக அரசு தரம் உயர்த்தியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறுக்க முடியாது. இதிலே, வேடிக்கை என்னவென்று கேட்டால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களை ஒருமுறை என்னுடைய அலுவலகத்திற்கு அழைத்து, முக்கியமாக எந்தெந்தப் பள்ளிகளைத் தரம் உயர்த்திட வேண்டுமென்று அவரிடம் நேரிலே கேட்டு செய்யலாம் என்று கேட்டேன். அவர் ஒரு லிஸ்ட்டைக் கொடுத்துவிட்டுப் போனார்கள். அதைப் பார்த்தால், அவருடைய தொகுதியிலே ஒரே ஒன்றியத்திலே 35 பள்ளிகளைத் தெரிவித்து, அத்தனையையும் தரம் உயர்த்திட வேண்டுமென்று கேட்டார். நான் எங்கே போவது? அவர் இது முக்கியம் என்று சொல்லி நான்கு பள்ளிகளைக் கொடுத்திருந்தால், இங்கே எழுப்பியிருக்கக்கூடிய இந்த இரண்டு பள்ளிகளையும் அதில் குறிப்பிட்டுச் சொல்லியிருந்தால், நிச்சயமாக அவை தரம் உயர்த்தப்பட்டிருக்கும். எட்டிப்பட்டி பள்ளியை நீங்கள் கேட்பதற்கு முன்பாக எப்படி நாங்கள் கடந்த ஆண்டே செய்திருக்கிறோமோ, அதேபோல, நம்முடைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் இன்றைக்கு எந்தப் பகுதியிலே நீங்கள் புதியதாகப் பள்ளிகளைத் தொடங்க வேண்டுமென்று சொன்னாலும்கூட, கேட்கின்ற இடத்தில் எல்லாம் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டுகூட புதிய பள்ளிகளைத் தொடங்குவதற்கு ஒப்புதல்களைப் பெற்றிருக்கிறோம். எனவே, பள்ளிகளைத் தரம் உயர்த்துவதிலும், தொடங்குவதிலும் இந்த அரசு என்றைக்கும் தயங்கியதில்லை. நிச்சயமாக இந்தப் பள்ளிகளைத் தரம் உயர்த்துவதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியது, 15 ஆண்டு காலமாக தருமபுரி மாவட்டத்திலே தரம் உயர்த்தப்படாத பள்ளிகளின் பட்டியலை அளித்திருந்தேன்...

2010 ஏப்ரல் 5]

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ப. டில்லி பாபு: இப்போதுகூட சொல்லியிருக்கிறார், அருந்ததிய இன மக்கள் அதிகமாக வாழக்கூடிய கௌாப்பாறை பகுதியிலே அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும். அதோடு, கடந்த காலத்தில் தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளில் ஓராசிரியர் பள்ளிகளாக எத்தனை பள்ளிகள் இன்றைக்கும் இருந்துகொண்டு இருக்கின்றன? எத்தனை நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன? இன்னும் தமிழாசிரியர்களே பணியில் இல்லாது இருக்கக்கூடிய அவல நிலைமை பல பள்ளிகளில் இருந்திருக்கிறது. ஆகவே, எத்தனை பள்ளிகளில் உடனடியாக தமிழாசிரியர் பணியிடம் நிரப்பப்படும் என்பது அரசின் செயற்குறிப்பில் ஏதாவது உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தமட்டில் ஓராசிரியர் பள்ளிகள் என்ற பிரச்சினை வராது. இன்னும்கூட நான் சொல்ல வேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்குப் புதிய இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை உருவாக்கித் தந்திருப்பதன் மூலமாக அனைத்துப் பள்ளிகளிலுமே ஓராசிரியர் பள்ளிக்கூடங்கள் என்கின்ற நிலைமை ஏறத்தாழ 1980-களினுடைய துவக்கத்திலே இருந்தது. அதற்குப் பிறகு, தமிழகத்திலே அந்தப் பிரச்சினை இல்லை. ஈராசிரியர் பள்ளிக்கூடங்கள்தான். அந்த ஈராசிரியர் பள்ளிக்கூடங்களுக்குக்கூட மூன்று ஆசிரியர் பணியிடங்களை இப்போது கொடுத்து, அரசு துவக்கப் பள்ளிகளிலே மூன்று பணியிடங்களைக் கொடுத்து அதிலே ஒரு திருப்புமுனையை ஏற்படுத்திய பெருமை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்குத்தான் என்பது கல்வித் துறை வரலாற்றில் உண்டு என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

இன்னொன்று, அப்படிக் கொடுத்திருக்கக்கூடிய ஓராசிரியர் பணியிடங்களை உங்கள் மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலே கடந்த

ஆண்டு இடைநிலை ஆசிரியர்களை நியமித்து கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களுக்கு அனுப்பியிருக்கக்கூடிய இடைநிலை ஆசிரியர்கள் 50 சதவீதம் பேர். இப்போது மாநில முன்னுரிமைப் பட்டியலில் வரக்கூடிய காரணத்திலேதான் தென் மாவட்டங்களிலிருந்து வரக்கூடியவர்கள் வெவ்வேறு பணியிடங்களிலே இருக்கக்கூடியவர்கள் அந்தப் பணியிலே சேராமல் இருக்கிறார்கள். அவர்களைக் கண்டறிந்து, அவர்கள் அந்தப் பணியிடங்களில் சேரவில்லையென்று சொன்னால், அந்தக் காலிப் பணியிடங்களில் மிக விரைவிலே ஆசிரியர்களை நிரப்புவதற்கு அரசு முயற்சி எடுத்திருக்கிறது. தமிழாசிரியர் பணியிடங்களைப் பற்றிக்கூட உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார். நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலேதான் 2006 ஆம் ஆண்டு முதல் ஏறத்தாழ B.T. தமிழ் என்று எடுத்துக்கொண்டால் 1,063 பேர் இப்போது T.R.B. மூலமாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். 246 பேர் இன்னும் மிக விரைவிலே தேர்வு செய்யப்படவிருக்கிறார்கள். எனவே, தமிழாசிரியர் பணியிடங்கள் எங்கேயெல்லாம் தேவையாக இருக்கின்றனவோ அங்கேயெல்லாம் அவர்களை இப்போதைக்கு 66 சதவீதம் பதவி உயர்வின் மூலமாகவும், 34 சதவீதம் நேரடி நியமனங்கள் மூலமாகவும் தொடர்ந்து அந்தப் பணியிடங்களில் நிரப்பக்கூடிய பொறுப்பை அரசு செவ்வனே செய்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

8—

பாலம்

***48901—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகரிலிருந்து காட்பாடி செல்லும் வழியில் பாலாற்றின் குறுக்கே புதிய பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS